


# திறவுகோல்

**2051 ஐப்பசி**
**மாத இதழ்**

வெளியீடு
**மன்னையின் மைந்தர்கள் அமைப்பு**

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# அன்னையே மகளாய்...!?

என் மகளே....!
என் உயிரில் உருவாகி...!
என் உயிராய் வளர்ந்து..!
என் வாழ்வுக்கு அர்த்தம்
தந்த தாரகை நீ.....!?

உன்னை இவ் உலகத்தில்
உயர்த்தவே....?
ஒவ்வொரு நாளும்  ஓயாமல்
உழைக்கிறேன்....!?

நீ  பள்ளியில் முதலாக  வந்தபோது
வானவில்  இறங்கிவந்து
வண்ண  மகுடம் சூட்டியது
என் தலையில்....!
நீ கல்லூரியில் கல்வியில்
கரை கண்டபோது...!
கானத்து குயில்கள்
என்னை கவி பாடி வாழ்த்தின...!

நினைவு கொள் மகளே....!
வழியில் வசீகரம் காட்டி....?
விஷக்கொம்புகள் வளைக்கப்
பார்க்கலாம் உன்னை...!
அழகாகவே கண்ணியமாகவே
வருவார்கள்....
நவீன மாரீசன்கள்...!

உன் மனது
சாதகப் பறவையாய்த்
தூயதையே அருந்தி.... !
மற்றவை புறம் தள்ளி....
எல்லாவற்றிலும் மேலானது
ஒழுக்கம்....!
என்பதை பறைசாற்ற வேண்டும்...!?

ஏனெனில்
என் அன்னையே எனக்கு
மகளாய் பிறந்திருக்கும்
அற்புதம் நீ...!?

நானே குழந்தையாகிப் போகிறேன்
ஒவ்வொரு முறையும் ....!
நீ செல்லமாய் என்னை கண்டிக்கும்
போதெல்லாம்....!?



- முனைவர். சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்
மன்னார்குடி

# பாடிச்சென்றவன் மூச்சு பாதியிலே நின்றது!!!




சிறிதும் நினைக்காத, என்றும் மறக்க முடியாத
ஓர் இறப்பு!!..

கை+பிடி=கபடிக்கு மிகச் சிறந்த
எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவனின் இழப்பு!!..
கனவுகளில் கூட சிரித்திட மறக்கும் உன் அன்பு
தாய்க்கு நீ கொடுத்த மிகப் பெரிய பேரிழப்பு!!..

பொல்லாப்பேர் வந்திடக் கூடாதென்றே
உன்னை போற்றி போற்றி வளர்த்த உன் பாசமிகு
தந்தைக்கு என்றும் ஏற்க முடியாத இழப்பு!!..

வயதால் எவ்வளவு தான் வளர்ந்தாலும் தம்பியே
தன்னுடைய முதல் குழந்தை என்று பாவித்த
உன் அக்காவிற்கு நீ கொடுத்த ஆறா இழப்பு!!..

இன்பத்தால் மனம் நிறைந்தும் துன்பத்தால்
மனம் உறைந்தும் உறவாய் உயிராய் உடனிருந்த உன் நண்பர்களுக்கு நீ கொடுத்த
இன்றியமையாத இழப்பு!!..

கள்ளமில்லா உன் முகத்தை
பாடையிலே கண்டவேளை!!..
கலங்கி நின்றே எண்ணிக்கொண்டோம்!!..
கயவன் அந்த கடவுள் என்று!!..

நீ ஒருமுறை மரணித்தாய் - இனி
உன் நினைவுகள் வரும் நேரங்களில் - நாங்கள்
ஒவ்வொரு முறையும் மரணிப்போம்!!..

நீ எங்களை விட்டு செல்லவில்லை!!..
எங்கள் நினைவுகளில் தங்கிவிட்டாய்!!..

மைதானத்தில் விளையாடி!!..
மணல் புழுதியை இரண்டாம் ஆடையாய் உடுத்தி!!..
கபடி ஆடிய நிலத்தில் வாடா பூவாய்!!..
உன் நினைவுகள் என்றும் பூத்தே இருக்கும்!!..



கார்த்திகா ராமதாஸ்,
பொறியாளர், வடுவூர் புதுகை

# பொல்லாத நாடு...



வி.முத்துக்குமார்

பொய்யான நாடு...
இதற்கு பொய்சுதந்திரம்
ஒரு கேடு....!!

ஏட்டில் கிடப்பது ஒன்று...!!
நாட்டில் நடப்பது ஒன்று....!!

கல்லறைக்கும் கிடைக்கும் உடனுக்குடன் நீதி....!!

இன்னமும் ஏனைய வழக்குகள் நிலுவையில்
இது என்ன அநீதி...!!

எத்தனை கொடுமையடா
என் நாட்டில்....!!

ஏழையின் வரியெல்லாம் சேர்த்துவைக்கிறது வெளிநாட்டில்...!!

இலஞ்சங்களும் ஊழல்களும்தான் இந்நாட்டின் வாரிசுகளா....???

ஏழைகளின் வாழ்வெல்லாம் என்றென்றும் சாபம் பெற்று வறண்டு போன தரிசுகளா....???

உரத்த குரலில் உரிமைகேட்டால் உனக்கிங்கு சிறை...!!

தேசத்தின் துரோகியென்று நெஞ்சில் விழும் தோட்டாக்களால் அறை...!!

சட்டம் என்பது பணத்தால்.. அதிகாரத்தால்... விலைக்கு வாங்கும் அற்ப பொருளா...???

இளைஞனே...!!
இதை களையெடுக்க உன்னிடம் இல்லையா நல்லதொரு அருவாளா.....???

எழுந்து வா இளைஞனே...!!

தூசுபட்டு கிடக்கும் சட்டங்களை சுத்தம் செய்ய...!!

நடக்கும் கொடுமைகளுக்கு

நடுகளத்தினில் யுத்தம் செய்ய....!!

எத்துனை ஆண்டுகாலம்தான் இந்தப் பொய் சுதந்திரம்.....???

நம் தேசம் எப்பொழுது கொண்டாடும் மெய் சுதந்திரம்...???

எதைசொல்ல....??
எதைவிட...???
இதோ எழுதிவிட....
என் எழுத்துகள் அடுத்த யுகத்தையும் இங்கு கடன் கேட்க...!!

எழுந்து வா தோழா...!!

அநீதிகள் கண்டு
சுருக்கென்று சுடட்டும் உன் தேகம்...!!

தேசியகீதத்தின் போதுமட்டுமல்லாமல்
தேசத்தில் சேதங்கள் காணும்போதெல்லாம் தேசப்பற்றுகொண்டு எழுந்து நிற்கட்டும் உன் ரோமம்...!!

அடுத்த வருடமாவது குறையட்டும் இந்த துயரமழை...!!

என் ஏழைகளை நனைத்துப்போகட்டும் எப்பொழுதும் எட்டாமல் இருக்கும் இந்த சுதந்திரமெனும் எட்டாத உயரமழை....!!

நாளை விடியுமென்று நம்பிக்கைப் பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கும் அனைவருக்கும்
இந்த இனிய கவிஞனின்
சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்....!!


- வி.முத்துக்குமார்

# மண்ணின் மைந்தனின் 80ஆம் ஆண்டு பிறந்த நாள் (10/10/2020)




சதாபிசேகம் கண்டு இருக்கும் தாத்தா அவர்கள் மேலும் , பூர்ண அபிசேகம் காண எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.
#10.10.2020 #80ஆம்_ஆண்டு_ பிறந்தநாள்_ நிகழ்வு.
நமது இந்திய ஒன்றியத்தின், தமிழ்நாட்டின் – (காவிரி டெல்டா ) சோழர் மண்டல மாவட்டங்களின் முதன்மையான ஒரு IPS அதிகாரி.
தமிழ்நாடு அரசு குரூப் I தேர்வில் 4 ஆம் இடம் பெற்று, முதல் தரமே சாதித்து IPS ஆன சாதனையாளர்.
மேலும் நமது (காவிரி டெல்டா ) சோழர் மண்டல மாவட்டங்களின் முதன்மையான இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் (IGP).




by @Elasu_Elanagai_Ela

திரு. ந. அப்பாதுரை IPS (IGP ஓய்வு),
புள்ளவராயன் குடிக்காடு - 614013, திருவாரூர் (மாவட்டம்)

புள்ளவராயன் குடிக்காட்டின்  - விவசாய பின்புலம் கொண்ட குடும்பத்தில் இருந்து வந்து ஊரிலேயே தொடக்க கல்வி பயின்று, ஆறாம் - ஏழாம் வகுப்புகளை - வடுவூர் பள்ளியிலும். எம் புள்ளவராயன் குடிக்காடு ஊரக மற்றும் எம் வடுவூர் தன்னரசு நாடு பகுதிகளில், மேல்நிலை கல்வி கற்க வழி இல்லாத சூழலில் உக்கடை அப்பாவு தேவர் பள்ளியில் உயர்நிலை, மேல்நிலை கல்வி பயின்று - தஞ்சாவூர் மன்னர் கல்லூரியில் (ராஜா'ஸ் காலேஜ்) பட்டம் பெற்றார்.


பின்னர் சொந்த உத்வேகத்தில் - குரூப் 1 தேர்வு முயற்சி செய்து, முதல் கணமே வென்று சாதித்த உழவன் மகனார். தமிழ்நாடு அரசு குரூப் 1 தேர்வில் 4ஆம் இடம் பெற்று, முதல் முறையே சாதித்து IPS ஆன சாதனையாளர்.

நமது இந்திய ஒன்றியத்தின், தமிழ்நாட்டின் - (காவிரிப்படுகை) சோழர் மண்டல மாவட்டங்களின் முதன்மையான ஒரு IPS அதிகாரி. மேலும் நமது (காவிரிப்படுகை) சோழர் மண்டல மாவட்டங்களின் முதல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் (IGP).

சேவை காலம் : கி.பி. 1968 - கி.பி. 2000 ஆண்டுகள். இவை அனைத்தும் திரு. ந. அப்பாதுரை IPS (IGP ஓய்வு) அவர்களையே சாரும்.

இவர்களால் நம் புள்ளவராயன் குடிக்காடு - 614013 ஊரகம், திருவாரூர் மாவட்டமும், தமிழ்நாட்டின்  - (காவிரி டெல்டா) சோழர் மண்டலமும் பெருமைக்கொள்கிறது.

--
இளநகை ரெங்கநாதன்
புள்ளவராயன் குடிக்காடு



# ஒரு நாள் நிச்சயம் விடியும்!

அது உன்னால் தான் முடியும் !

வெயிலின் தாக்கத்தால் பூக்கள்
வாடலாம்
நீ ஒருபோதும் வாடாதே !

அம்மாவின் அழுகையும்
ஆதரவற்ற நிலையும்
அப்பாவின் உழைப்பும்
ஆதங்கத்தின் தவிப்பும்
என்னையும்
பூக்களையும்
இறுக்கமாய்
கட்டின!
அவர்களின் விடியல்
நான் எனும் போது
இயற்கையின்
வெப்பத்தை
சகித்துக்
கொள்கிறேன்!

வாடிக்கையாய் பூ
வாங்கும்
வாடிக்கையாளர்களின்
பார்வை என்மீது
எந்த பரிவையும்
காட்ட வேண்டாம் !

மன்னர் ஆட்சியில்
இருந்து கொண்டு
மறு கை மடக்கி
எதையும்
இலவசமாய்
நான் கேட்டதில்லை!

அதிகாரத்தின் உச்சியை
பிடித்து
ஆட்டிப் பார்க்கும்
அறிவுத் தேடல் நான்!

வெயிலின்
அனலை விட
என் ஆழ் மனதில்
அனல் வீசுகிறது!
பாசங்கு காட்டும் சமுதாயத்தில்
தனித்துவமாய்
நின்று வெல்ல வேண்டும் !
அகிலம் போற்ற வேண்டும்!



- பழ. தமிழன் சின்னா
6383698728
புதுக்கோட்டை

# கைப்பேசி காதல்

இன்றைய நிலையில் காதலையும், கைப்பேசியையும் ஒருவருக்கு இன்னொருவர் சொல்லி புரியவைக்க தேவையில்லை. ஏனெனில் இன்று இரண்டுமே அனைவருக்கும் எளிதாக கிடைக்க கூடிய ஒன்றாகிவிட்டது. நாம் அனைவரும் எங்காவது எப்போதாவது பார்த்து ரசித்த இந்த இரண்டுமே இன்று கேள்வி பட்ட சில மணி நேரங்களில் மறக்க கூடிய ஒன்றாக மாறிவிட்டது. இது இரண்டு மட்டும் மாறிவிட்டதா என்று கேட்டால், இல்லை. ஆனால் இந்த மாற்றத்தில் இந்த இரண்டிற்குமே நெருங்கிய தொடர்ப்பு உள்ளது.

கால மாறுபாட்டில் இவை இரண்டும் எப்படி மாற்றம் அடைந்து உள்ளது? இக்கட்டுரையில், இந்த மாற்றம் தேவை உள்ளதா இல்லை தேவை இல்லாததா, நல்லதா இல்லை கெட்டதா என்பதை பற்றி எல்லாம் இல்லை. ஆனால் இந்த மாற்றத்தை பற்றிய ஒரு சில உண்மைகளே இந்த கட்டுரை. கட்டுரைக்கு முன் அதை பற்றிய ஒரு சிறு கவிதை.

காதலை களவாடிய அலைபேசி

அலைபேசி வந்ததும்,

அரிதாக நடைபெற்ற ஆத்மார்த்த காதல் எல்லாம் எளிதான
ஏமாற்று கதையாய் மாறிப்போனது,

வாய் பேச நினைத்த வார்த்தைகள் எல்லாம் விசைபலகைக்குள்
சிக்கிக்கொண்டது,

அர்த்தமுள்ள அழகிய சண்டைகள் எல்லாம் ஆன்லைன்
சண்டைகள் ஆகிவிட்டது,

குரல் கேட்க ஏங்கிய செவிகளெல்லாம் அலைபெருக்கி
ஓசையில் அடங்கிப்போனது,

முகம்பார்த்து பேச காத்திருந்த உதடுகள் எல்லாம்
ஒலிவாங்கியிடம் பேசி களைப்பாறிவிட்டது,

கண்ணீருடன் நடந்த காதல் பிரிவுகள் எல்லாம் கணக்கை
முடக்குவதுடன் நின்றுபோனது.

- கவிதை எழுதியவர்: இசை



இன்றைய நாட்களில் நம்மில் பலர் காதல் என்ற அழகை கைப்பேசிக்குள் அடைத்து வைத்து இருக்கிறோம் என்பதே உண்மை. அன்று முதல் இன்று வரை காதல் வயதைப் பார்த்து வருவதில்லை என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால் காதல் செய்யும் முறையில் உள்ள மாற்றத்தை நம்மில் பலர் புரிந்துக்கொள்வதில்லை. அப்படி என்ன மாற்றம், அந்த மாற்றத்தில் கைபேசியின் பங்களிப்புகள் யாவை?

காதலில் கைப்பேசியின் பங்களிப்புகள்:

அன்றைய நாட்களில் எத்தனை பேர் காதலித்தார்கள்? அதில் எத்தனை பேர் திருமணம் செய்து கொண்டார்கள்? திருமணம் செய்து கொள்ளாதவர்களின் பிரிவுக்கு காரணம் என்னவாக இருக்கும்? இவை எல்லாம் பிறர் கூறவோ அல்லது ஒரு நேரில் பார்த்தது மூலமாகவோ நமக்கு தெரிந்திருக்க வாய்ப்பு அதிகம் உள்ளது. இதே கேள்வியை இன்றைய நாட்களின் நிலைமையில் வைத்து சிந்தித்து பாருங்கள். நமக்கே புரிய வரும்.

கைப்பேசி இல்லாதபோது ஒருவரை ஒருவர் தொடர்புக்கொள்ள வேண்டும் என்றால் தொலைபேசி மூலமாகவோ அல்லது நேரில் சென்றோ சந்திக்க வேண்டும். அதேபோல் தான் காதலிப்பவர்களும் பேசி கொண்டிருப்பார்கள். அப்படியே பேசி கொண்டிருந்தாலும் நீண்ட நேரம் பேச இயலாது, வாய்ப்பு கிடைக்கும் போது தான். இல்லையெனில் நண்பர்கள் மூலம் தகவல்களை பரிமாறி கொள்ள வேண்டும்.

வெளியில் சென்று வருபவர்கள் சந்தித்துக்கொள்ள வாய்ப்பு அதிகம் இருந்திருக்கும் பிறருக்கு வாய்ப்பு குறைவாக இருந்திருக்கும் (இதுவே அன்றைய நாட்களில் சிறுவயதில் காதலிப்பர்வர்களின் எண்னிக்கை குறைவாக இருந்ததற்கு ஒரு காரணமாக கூட இருக்கலாம்). அவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் அவர்களை பற்றி பேசவே நேரம் சரியாக இருந்திருக்கும். ஆகவே அவர்களின் தேவையானவற்றையோ அல்லது தனிப்பட்ட கருத்துக்களை பேசிக்கொண்டிருப்பார்கள் (ஆனால் ஒரு ஆண் மற்றொரு ஆணையோ, ஒரு பெண் மற்றொரு பெண்ணையோ சந்திப்பதற்கு எப்போதும் வாய்ப்பு அதிகம் தான்).

ஒரு ஆண் தன் காதலியிடமோ அல்லது ஒரு பெண் தன் காதலனிடமோ பேசவே வாய்ப்பு குறைவு என்றபோது ஒரு ஆண் மற்ற பெண்களிடம் பேசவும் ஒரு பெண் மற்ற ஆண்களிடம் பேசவும் வாய்ப்பு மிக மிக குறைவு தான். கிடைக்கும் கொஞ்ச நேரத்தையும் காதலிப்பவர்களுடன் செலவழிப்பதால் பிறரிடம் பேச வாய்ப்பு இருக்காது. இவ்வாறு இருக்கையில் ஒரு பெண்ணுக்கோ தன் காதலன் மற்றவர்களை விட தன் மேல் கவனம் செலுத்துகிறான் என்ற ஒரு நம்பிக்கை இயல்பாகவே உருவாகிவிடும்.

அதேபோல் ஒரு போல் ஒரு ஆணுக்கும் தன காதலி மற்றவர்களை விட தன் கவனம் செலுத்துகிறாள் நமக்காக நேரம் ஒதுக்குகிறாள் என்ற ஒரு நம்பிக்கை இயல்பாகவே

உருவாக கூடிடும். பின் திருமணமான பின் அதிக நேரம் கிடைக்க நேரிடும், அதுவே ஒருவரை ஒருவர் இன்னும் அதிகமாக புரிந்து கொள்ள வழிவகுக்கும்.

இந்த உதாரணத்தையே இன்றைய சூழ்நிலையில் நினைத்து பாருங்கள். கைப்பேசி இல்லாத வீடே இல்லை என்று சொல்லும் நிலை போய் கைப்பேசி இல்லாத நபரே இல்லை என்றும் நிலை வந்துவிட்டது. கைப்பேசி உலகையே கைக்குள் கொண்டுவந்து விட்டது. காதலை மட்டும் விட்டுவைத்துவிடுமா என்ன?

இன்று அனைவருமே கைப்பேசியை உபயோகித்துக் கொண்டிருக்கிறோம், அப்படியென்றால் ஒருவர் நினைத்த நேரத்திற்கு நினைத்தவருடன் பேச முடியும். பொதுவாகவே மனதிற்கு பிடித்தவருடன் பேச விரும்புவதே மனித இயல்பு. அதிலும் காதலிப்பவர்கள் எப்போது பேசுவது என்று காத்திருப்பார்கள், இது காதலிப்பவர்களின் இயல்பு. இப்படி இருக்கையில் கைப்பேசி இருந்தால் எப்படி இருக்கும் என்று நினைத்து பாருங்கள். எப்போது பேசுவோம் என்று காத்திருந்தவர்கள் இன்று நினைத்த நேரத்திற்கு பேசி கொண்டிருக்கிறார்கள். அதனால் என்ன என்று கேட்கலாம். ஆனால் மாற்றத்தின் முக்கியமான நிலையே இங்கு தான் உள்ளது.

அதற்கு முன் சிந்தித்து பாருங்கள் அன்றைய நாட்களில் காதலிப்பவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. மேலும் அப்போது நடந்த காதல் பிரிவுகளின் எண்ணிக்கையும் குறைவு. அந்த பிரிவிற்கும் பெரும்பாலான காரணம் பெற்றோர்கள் திருமணத்திற்கு ஒற்றுக்கொள்ளவில்லை என்பதே ஆகும் அதை தவிர்த்து மற்றைய காரணங்கள் குறைவு, ஆனால் இன்று காதலிப்பவர்களின் எண்ணிக்கை அதிகம் அதேபோல் காதல் எண்ணிக்கையும் அதிகம் அந்த பிரிவிற்கான காரணங்களும் அதிகம். இங்கு தான் கைப்பேசியின் பங்கு அதிகம் உள்ளது.

கைப்பேசி இல்லாத நிலையில் நம் காதலிப்பவர்களுடன் பேசவே வாய்ப்பு குறைவாக இருந்ததால் கிடைக்கும் நேரத்தையும் காதலிப்பவர்களுடன் செலவளித்தனர். கைப்பேசி வந்ததும் காதலிபார்வைகளுடன் மட்டுமல்ல மற்ற அனைவரிடமும் நினைத்தால் பேச முடியும் என்றாகிவிட்டது. பின்பு என்ன அனைவரிடமும் கைப்பேசி உள்ளது அதனால் காதலை வெளிப்படுத்துவதும் எளிதாகிவிட்டது. அதனால் இன்று காதலிப்பவர்கள் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. இன்று காதலிப்போர் பலர் கைப்பேசி இல்லை என்றால் காதலை வெளிப்படுத்த முடியாமலேயே போயிருக்கும்.

காதலை வெளிப்படுத்திய பிறகு  காதலிப்பவர்களிடம் பேசவே மனம் விரும்பும். ஆனால் இப்போது அனைவரிடமும் பேச வாய்ப்பு இருப்பதால் நாம் அனைவரிடமும் பேசுவோம். இங்கு தான் பல தவறான புரிதல்கள் ஏற்படுகின்றன. பொதுவாகவே காதலிப்பவர்கள் அனைவருக்கும் தன் காதலன் மீதோ அல்லது காதலி மீதோ இவர் நமக்கு சொந்தமானவர் (possessiveness) என்ற எண்ணங்கள் கண்டிப்பாக இருக்கும். இவ்வாறு இருக்கையில் நாம் பிறருடன் நேரத்தை செலவிடுவதை நம்மை

காதலிப்போர் அதிகம் விரும்பமாட்டார்கள். அதிலும் எதிர் பாலினத்தவரோடு நேரம் செலவழித்தால் சில சமயங்களில் கோபம் கூட வரலாம், காரணம் நம்மிடம் பேசுவதை போலவே அனைவரிடமும் பேசினால் நாமும் அனைவரும் ஒன்றை என்ற எண்ணம் தன் இன்று பெரும்பாலோனோரிடம் உள்ளது சொல்லப்போனால் அதில் தவறும் இல்லை, அதற்காக மற்றவர்களிடம் பேசுவதும் தவறில்லை. ஆனால் சரியான புரிதல் இல்லாமையால் இவை தவறாகின்றன. சிலர் காதலிப்போருடனான புரிதலை சரியாக ஏற்படுத்திக்கொள்கின்றனர்.

காதல் ஏற்படக் கைப்பேசி எவ்வளவு முக்கியமான ஒன்றாக உள்ளதோ அதே போல் இன்று பல காதல்கள் பிரிவதற்கும் கைப்பேசி தான் காரணமாய் அமைந்துள்ளது. இன்று கைப்பேசியின் மூலம் பேசிக்கொள்வதை விட குறுந்தகவல்கள் மூலம் உரையாடி கொள்வதே அதிகம்.

நாம் முகத்தைப் பார்த்து பேசிக்கொள்வதற்கும், கைபேசியில் வார்த்தைகள் (voice call) மூலம் உரையாடி கொள்வதற்கும் குறுந்தகவல்கள் (message, whats app chat) மூலம் உரையாடி கொள்வதற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. நாம் பேசிக் கொள்ளும்போது நாம் பேசும் விதத்தை வைத்தே நாம் கோபமாக பேசுகிறோமா இல்லை அன்போடு பேசுகிறோமா என்று அனைவராலும் உணர முடியும், அனால் எழுத்துக்கள் மூலம் உரையாடி கொள்ளும்போது அவை நம் உணர்ச்சிகளை நாம் நினைக்கும் விதத்திலேயே கொண்டு சேர்ப்பதில்லை.

புரிதல் இருந்தால் மட்டும் இது சாத்தியம் அல்லது சண்டை வந்தால் கூட அவ்வளவு பெரிதாக இருக்காது. ஆனால் இன்றைய காதல் வாழ்க்கையில் எழுத்துக்கள் மூலம் நடக்கும் உரையாடல்கள் தான் அதிகம், ஆனால் புரிதல்களோ குறைவு, நாம் ஒரு கேள்வியை கேட்டால் நாம் முன்பு கோவமாக பேசியிருந்தால் இப்போதும் கேப்பதும் கோபத்துடனே அவர்கள் மனதில் பிரதிபலிக்கும். இவையே சண்டை பெரிதாவதற்கு ஒரு காரணமாய் அமைந்துள்ளது. அதுவே முகத்தை பார்த்து பேசியிருந்தால் நம் முகமே நம் எண்ணத்தை காட்டிக்கொடுத்துவிடும், அதனால் தான் பொதுவாகவே ஒருவருடன் சண்டை என்றால் நேரில் பேசு சரி ஆகி விடும் என்று கூறுவோம்.

ஆனால் கைபேசியில் இது சாத்தியம் இல்லை அதனால் சிறு சண்டை கூட பெரிதாக தெரிகிறது, அதுவே காதல் பிரிவு வரை அழைத்து செல்கிறது. கைபேசியின் மூலம் எளிதாக கிடைப்பதால் பிரிவும் இக்காலத்தில் அதிக மக்களுக்கு பெரிதாக தெரிவது இல்லை. வருத்தம் இருந்தாலும் Block செய்து விட்டு இன்று நிறைய பேர் அவர்கள் வேலையை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

இன்று நடக்கும் காதல் பிரிவுகளின் கடைசி உரையாடல்கள் கைப்பேசியில் தான் அமைந்திருக்கும், இவற்றுள் கைப்பேசியில் உரையாடிதை முகத்தைப் பார்த்துப் பேசிருந்தால் பல காதல்கள் பிரிந்தே இருக்காது.

சுருக்கமாகக் கூற வேண்டும் என்றால் நம் மனதில் வைத்து ரசிக்க வேண்டிய காதலைக் கைப்பேசிக்குள் பூட்டி வைத்திருக்கிறோம் என்பதே கசப்பான உண்மை.




நன்றி.

--

**விவேக்மணி**
மன்னார்குடி.

## நந்தினி செழியன்,

ஒன்பதாம் வகுப்பு, எடகீழையூர்



# அவசர அவசரமாய்

வெளியேறுகிறார் கடவுள்...
குழந்தை
அழுகின்ற வீட்டிலிருந்து!

✱✱✱

வானம்
எனக்கு பக்கமாகும்
போதெல்லாம்,
தூரமாக்கி விடும்
உன் மௌனத்திற்குள்
ஒளிந்திருக்கிறது...
என் வாழ்விற்கான அர்த்தங்கள்!

✱✱✱

அதிவேகமாய்
சாலையைக் கடக்கும்
அவசர ஊர்தி,
உள்ளே ஒரு உயிரும்
வெளியே பல உயிரும்
துடிக்கின்றன ...
சத்தம் எதுவுமில்லாமலே!

✱✱✱

ரசிக்க
முடிவதில்லை...
வேதனையோடு
அடைபட்டுக்கிடக்கும்,
கூண்டு கிளிகளை!

✱✱✱

நிமிடத்திற்கு நிமிடம்
பிறக்கும்
கவிதைக் குழந்தைகளுக்கு
என்னால்
பாலூட்ட முடிவதில்லை,
மை ஊட்டுகிறது...என் பேனா!

✱✱

மழை நாளில்
தெருவோரத்தில் வசிக்கும்
நாய்க்குட்டிக்கு குடைபிடிக்கும்
பெரியவரைப் பார்த்து
ஏளனமாய் சிரித்த படி
கடந்து போகும் மனிதர்கள்,
கோபத்தில் அதிகமாய்
அழுது தீர்த்தது ...வானம்!

✱✱✱

வானவில்லின்
வண்ணங்களை விட
அதிகமாக இருக்கிறது...
ரசிக்கும் குழந்தைகளின்
முக பாவனைகளில்!

✱✱✱

தவறாக எண்ணினாலும்
தவறாமல்
வந்து விடும் நட்சத்திரங்களுக்கு,
குழந்தையின் கண்கள்!

✱✱✱

சாதாரணச் செய்தியை
தலைப்புச் செய்தியாகவும்,
தலைப்புச் செய்தியை
சாதாரணச் செய்தியாகவும்
படித்துப் போகும் மனதிற்குள்

ஒளிந்திருக்கிறது ...
சொல்ல முடியா சோகமொன்று!

✸✸✸

நான்
புத்தகத்தோடு
பேசிக் கொண்டிருக்கும்
போதெல்லாம்,
நீ
பூக்களோடு பேசிக்
கொண்டிருக்கிறாய்...
புத்தகத்தை மூடி வைக்கும்
போது,
வீடெங்கும் உன் வாசம்!

✸✸✸

வர வேண்டுமென
நினைக்கும் போதெல்லாம் வராமலும்,
வர வேண்டாமென
நினைக்கும் போதெல்லாம்
தவறாமல் வந்துவிடும் ,
மழைக்குத் தெரிவதில்லை ...
பத்து வட்டிக்கு பணம் வாங்கி
பல நாட்களாய்,
உயிர் கொடுத்து வளர்த்த பயிருக்கு,
நாளை அறுவடை நாள் என!

✸✸✸

நானாய் அழுது
நானாய் சிரித்து
நானாய் வாழும்
இந்த தனிமை வாழ்வில்
ஒரு போதும்
நானாய் இருந்ததில்லை...
நான்!

✸✸✸

துன்பமான நேரம்
ஆறுதல்படுத்துகிறது...
அப்பா
வளர்த்த மரம்!

✸✸✸

உன்னைப் பற்றி பேசி
உன்னைப் பற்றி எழுதி
உன்னைப் பற்றி நினைத்து
உன்னைப் பற்றி எழுதச் சொல்லும்
என் தனிமைக்கு
குழந்தையின் சாயல்!



- மு.முபாரக்

# அன்னை



ச.அருள்பிரசாத்

அன்னை நீ - எனக்கு
அனைத்தும் நீ...!!

கண்களுக்கு புலப்படாமல் நம்மை காப்பது கடவுள் என்றால்
என் கண்களுக்கு புலப்பட்டு கவலைகள் புலப்படாமல்
காக்கும் நீ,
கடவுளின் அன்னையல்லவா...!!!

உன் வாழ்வை உருக்கி
கனவுகளை சுருக்கி - என் வாழ்வில் ஒளி தரும் தீப
ஒளியே...!!!

பசி என்னும் பகைவன் என் கண்ணை மறைப்பதற்குள்
பசியாற்றும் பைந்தமிழே...!!!!

உன் கனவு தொலைத்து
என் கனவு நிறைவேற!
உன் ஆசைத் தவிர்த்து
என் ஆசை ஈடேற
உறக்கமற்று உழைக்கும்
கண்மணியே...!!!!!!

உன் வலிகளையெல்லாம்
மறை(று)த்து எனக்கு
நல்வழி காட்டும்
நல்அன்னையே...!!!!!

உன் உடலும் மனமும் சோர்ந்தாலும்
என் மனம் வாடாது என் உடல் நோகாது நல்வாழ்வு அளிக்கும் அன்புச் சுடரே...!!!!

உனக்கு ஒரு வாய் உணவு இல்லாவிடினும் எனக்கு கடைசி ஒற்றைச் சோறு எஞ்சி
விடாமல் பசியாற்றும் தாயோ...!!!!

உன் இரத்தத்தை பாலாக்கி
உன் வாழ்வை கல்லாக்கி
உன் உழைப்பை

உளியாக்கி
என் வாழ்வை சிலையாக்கும் - சிற்பியே...!!!!!

நீ பேசுவது குறைவு!!
உன் வார்த்தைகள் பேசுவது அதிகம்...!!!
அவ்வாறு பேசிய வார்த்தையே என் வாழ்க்கை...!!!!!!

பத்து மாதம் பயத்தினில்
பசியினில்
இடர்பாடுகளோடு பயணம்
அந்த பயணத்தின்
முடிவே என் வாழ்வின் ஆரம்பம்...!!!!

கருவறையில் சுமந்து
காலமெல்லாம் காக்கும் உன்னைக் கடவுளும் காணத்துடிப்பதில்
ஆச்சரியம் இல்லை...!!!!!

அன்புடன்
- ச.அருள்பிரசாத், B.COM, MDA, ICMAI
சிராங்குடி





ரா. மதுவர்ஷினி,
சரஸ்வதி வித்யாலயா பள்ளி, பெருவிடைமருதூர்

# செவலை

அன்பு செவலைக்கு...!
நீ நலமாய் இருக்க வேண்டுமென்ற
அன்புடனும் அக்கறையுடனும்!

புகுந்த இடத்தில்
மனம் கோணாமல் நடந்துக்கொள்
இல்லையேல்
வளர்த்த விதம் சரியில்லையென்று
அம்மாவைத்தான் திட்டுவார்கள்!

போன இடத்தில் சரியாகவே
கறக்கவில்லையாமே!
நீ இன்னும் என்மேல்
கோபத்தில் இருக்கிறாய்
என்றே எண்ணுகின்றேன்!

செவலை அறியாதது ஒன்றுமில்லை!
இங்கிருக்கும்போது
வெரும் தவடும் தண்ணியும்
கொஞ்சம் வைக்கோலுமென
பசியும் பட்டினியுமாகத்தானே
கிடந்தாய்!

இன்று மூன்றுவேளை உனக்கு
புல்லும் புண்ணாக்கு தீவனத்தோடு
காத்தாடிக்காத்தும் கிடைப்பதாக
கேள்விப்பட்டேன் சந்தோசம்!

என் வயிற்றுப்பிழைப்புக்காக
உன்னை விற்றேன் என்றாலும்
உன்னை நல்லதொரு இடத்தில்தான்
விட்டிருக்கிறேன் அம்மா!
என்னையே நினைக்காமல்
உன் கன்றோடு உண்டு
வாழ் நிம்மதியாய்!

காலம் மாறி என் வறுமை
பிணி நீங்கும் போது
உன்னை முடியாதென்றாலும்
நீ ஈன்ற கன்றையாவது வாங்கிவந்து
வளர்த்து உன்னை விற்ற பாவம்
தீர்ப்பேன்
கடவுளாய் இருந்து என் குடும்பம்
காத்தவளே
உனக்கு என் நன்றியும் மன்னிப்பும்
என்றும் உன்பால் அன்புடன்
உன் அம்மா..!

அன்புடன்,
**மகிழை. சிவகார்த்தி,**
புறத்தாக்குடி,
கைப்பேசி: +91 8147480966



# மறுமுகம்



கவிதாயினி
சை. சபிதா பானு
காரைக்குடி

ஆசிரியர்களின் மறுமுகம் அறிவு
மருத்துவர்களின் மறுமுகம் சேவை
காவலர்களின் மறுமுகம் பாதுகாப்பு
மாணவர்களின் மறுமுகம் படிப்பு

நீதி மன்றத்தின் மறுமுகம் தர்மம்
கோழைகளின் மறுமுகம் தோல்வி
தன்னம்பிக்கையின் மறு முகம் விடாமுயற்சி
அனுபவத்தின் மறுமுகம் பயிற்சி
நட்பின் மறுமுகம் உறுதுணை
உடன்பிறப்புகளின் மறுமுகம் ரத்த பந்தம்
அன்பின் முகமும் மறுமுகம் ''அம்மா''!

# இளமையும், முதுமையும்

மனித வாழ்வில் மாறும் மாற்றங்களில் மாறாத மாற்றம்
மனிதனால் எதிர்க்க முடியாது...

ஒவ்வொரு மனித உயிரும்
ஏற்க கூடியது

மண்ணுயிர்கள் ஏற்றுக்கொண்டது
மற்றவர் முன் மறுக்கவோ
மறைக்கவோ முடியாதது

வாழ்வில் வரும் இன்பம்
துன்பங்களை போன்றது

இதயத்துடிப்பை போல்
இயல்பாய் ஆனது

இறைவன் பூமியில் இட்ட இருவகை பூக்கோலம் போன்றது
ஒவ்வொரு மனித உடலையும் வென்று நின்றது....

''இளமையும் முதுமையும்''

# சிலையின் விலை



இளவரசி இளங்கோவன்

பால்காரரின் டிவிஸ் மோட்டார் வண்டியில் பொருத்தப்பட்டிருந்த ஊது கொம்பின் பாம் பாம் சத்தம் விட்டு விட்டு கேட்க கொஞ்சம் கொஞ்சமாக நித்திரை கலைந்தது பார்வதிக்கு. கிராமம் என்று சொல்லி கொண்டாலும் தன் மேனியில் நகரத்து சாயம் பூசிக்கொள்ள தொடங்கிய இரண்டும் கெட்டான் ஊர் அது. திண்ணை, நடு வீடு, சாமியறை, சமையற்கட்டு கொண்ட நாட்டு ஓடு வேயப்பட்ட சிறிய வீடு அது. வீட்டை ஒட்டி கூரை வேயப்பட்ட மாட்டுக்கொட்டகை. வீட்டை சுற்றிலும் கிளுவை மர வேலி. விவசாயம் தான் அந்த கிராமத்தின் பிரதான தொழில் என்றாலும் இயற்கையை விட்டு விலகிய உரத்தால் மட்கிப்போன மனிதர்களால் விவசாயம் நசிவடைந்து நாளுக்கு நாள் தளர்வடைந்து வந்தது. வளர்ச்சி என்ற பெயரில் உலக மாற்றத்தின் விளைவு அதன் கிராமத்தையும் விட்டு வைக்கவில்லை.

செம்பட்டை தட்டிய மயிரை வாரி கொண்டையாய் முடித்துக்கொண்டு திண்ணை சுவரில் இருட்டுக்கு கண்களை பழக்கி வாசல் மற்றும் மாட்டுக்கொட்டகை மின்விளக்கை போட்டாள் பார்வதி. படுத்திருந்த கோரை பாயை சுருட்டி மூலையில் வைத்துவிட்டு, தனது பக்கத்தில் படுத்திருந்த பாயை விட்டு விலகி வெறுந்தரையில் தூங்கிய பெரிய மகன் வெற்றியை நகர்த்தி பாயில் போட்டாள்.

35 வயதை நெருங்கி கொண்டிருந்த பார்வதிக்கு உழைப்பும் ,வறுமையும் பத்து வயது அதிகமான தோற்றத்தை பரிசாய் கொடுத்திருந்தது.

மண்ணையும் மாடுகளையும் மட்டுமே நம்பிய பார்வதியின் பெற்றோர் பெண்பிள்ளைக்கு கஞ்சி காய்ச்ச தெரிஞ்சா பத்தாதா படிப்பெல்லாம் என்னத்துக்கு என கிராமத்தின் அன்றைய பொது விதியை மதித்து பார்வதியை பள்ளிக்கு அனுப்பவில்லை. 19 வயதிலேயே பக்கத்துக்கு தெருவில் இருக்கும் ஒரு ஏக்கர் வயலும் சிறு தோப்பும் வைத்திருந்த மாரிமுத்துக்கு மணம் முடித்தனர். அடுத்த வருடமே தலைச்சன் பிள்ளையாய் வெற்றிமாறனும் அடுத்த ஒன்றரை வருட இடைவெளியில் அன்புமாறனும் அடுத்தடுத்து ஆண்பிள்ளைகளாய் பிறக்க மாரிமுத்துவுக்கு தாளாத மகிழ்ச்சி. ஆடு, மாடு, கோழி, பிள்ளைகள், சமையல், வயல்,தோப்பு என ஓயாத வேலை பார்வதியை உட்காரவிடாமல் செய்திருந்தது.

கண்களை சுருக்கி சுவர் கடிகாரத்தை பார்த்தாள். மணி மூன்றரை காட்டியது. தூண் பக்கத்தில் வைத்திருந்த பால்குவளையையும்,விளக்கெண்ணையும் சிறு சொம்பையும்

எடுத்துக்கொண்டு வாசலுக்கு வந்தாள். வாசலில் அன்னக்கூடையில் இருந்த குளிர்ந்த நீரை அள்ளி வாய் கொப்பளித்து முகம் கழுவிக்கொண்டு சொம்பில் கொஞ்சம் தண்ணீரும் எடுத்து கொண்டு மாட்டுக்கொட்டகைக்கு போனாள். அவளை கண்டதும் வெள்ளை பசு சாவகாசமாய் எழுந்து நின்றது. சற்று தொலைவில் கட்டப்பட்ட கன்னுக்குட்டி துள்ளி கொண்டிருந்தது. பார்வதி கன்னுக்குட்டியை அவிழ்த்துவிட பாய்ந்து சென்ற கன்று பசுவை முட்டி மோதி பால் குடிக்க தொடங்கியது.

கன்றின் வாயில் பால் நுரை தெரிய கன்றை இழுத்து மாட்டுக்கு பக்கத்தில் நெருக்கமாக கட்டி விட்டு கையிலிருந்த தண்ணீரில் காம்புகளை கழுவி விட்டு கையில் விளக்கெண்ணையை தடவிக்கொண்டு இரு கைகளாலும் சர் சர் என ஒரு எந்திரத்தை போல பால் கறந்தாள். 9 வயதில் பால்கறக்க தொடங்கிய பார்வதிக்கு எல்லா வேலைகளும் தண்ணி பட்ட பாடு. பால்குவளை நிறைய, கன்றுக்கு மீதியை விட்டு எழுந்து கன்றை அவிழ்த்து விட்டாள். பால்குவளையை திண்ணையில் வைத்துவிட்டு பால்காரர் பால் எடுக்க வர அரை மணிநேரம் ஆகும் என நினைத்து கொண்டு சாணியை கரைத்து வாசல் தெளித்து மாட்டுக்கொட்டகை கூட்டி, கோழிக்கூடு சுத்தம் செய்து மாடுகளை கொல்லைப்புறத்தில் இருந்த வைக்கோல் போரில் கட்டி விட்டு ஆடுகளுக்கு சாக்கு மூட்டையை பிரித்து பசும்புல்லை போட்டுவிட்டு வந்தாள்.

தொலைவில் கேட்ட மோட்டார் சைக்கிள் சத்தமும் பாம் பாம் கொம்பு சத்தமும் பால்காரர் வருகையை உறுதி படுத்த வீட்டுக்கு சிறு சொம்பில் பால் ஊத்தி வைத்துவிட்டு, பால் குவளையை மூடி எடுத்து கொண்டு பால் எடுக்கும் வழக்கமான இடத்துக்கு போனாள். பார்வதியை போலவே அத்தெருவில் பால் கறக்கும் பெண்களும் பாலோடு வர, பால் வாங்கும் பெண்கள் சிறு வாளியோடும் சொம்போடும் முகத்தில் தூக்கம் கலையாமல் சோம்பலோடும் வர மோட்டார் வண்டியாய் நிறுத்தி இறங்கிய பால்காரர் மின்னல் வேகத்தில் செயல்பட்டார்.

ஒவ்வொருவரின் பால்குவளையை வாங்கி அளந்து பாலை எடுத்துக்கொண்டு அவரவர் கணக்கை பால் நோட்டில் எழுதிவிட்டு கடமையே கண்ணாக சிட்டாய் பறந்தார் மோட்டார் சைக்கிளில்.

தூக்கம் முற்றிலும் களைந்து காலை சுறுசுறுப்பு ஒட்டிக்கொள்ள அடுப்பை மூட்டி தேநீர் தயாரித்தாள். மாரிமுத்துவும் முகம் கழுவி வர இருவரும் தேநீர் பருகி முடித்து, பரபரப்பாக காளைமாடுகளை அவிழ்த்து மாட்டு வண்டியை பூட்டினான் மாரிமுத்து. வண்டி பாதை படலை திறந்து வண்டிக்கு வழி விட்டு நின்ற பார்வதியிடம் ‘‘களையெடுக்க நாலு ஆளு வரேன்னு இருக்கு வெள்ளருமே கஞ்சி கொண்டு வந்துடு’’ என்று மாட்டை உசுப்பி வண்டியை வேகமெடுத்தான் மாரிமுத்து.

‘‘ரெண்டு பேரையும் பள்ளிக்கொடத்துக்கு அனுப்பிட்டு வரேன்‘‘ சொல்லிக்கொண்டே படலை சாத்திவிட்டு தண்ணீர் பிடிக்க குடங்களை தூக்கி கொண்டு நடந்தாள்.

மாட்டுக்கு மனிதர்களுக்கு எல்லாமே பஞ்சயாத்து குழாய் தண்ணீர் தான். பெரிய சிமெண்ட் தொட்டிகளில் தண்ணீர் நிரப்பி முடித்து அவசரமாய் ஓடி வந்த பார்வதி நேரமாகிவிட்டதை பார்த்து இரு கிண்ணத்தில் கஞ்சியை ஊற்றி வைத்து தட்டில் வறுத்த மிளகாய்களையும் அவித்த மாங்காய்களையும் போட்டு திண்ணையில் வைத்துவிட்டு வயலுக்கு கஞ்சியை ஊத்திகொண்டு சும்மாடு கட்டும் துணியை தேட தொடங்கினாள். கிணற்றடியிலிருந்து குளித்து விட்டு வந்த மூத்த மகன் வெற்றி ‘‘என்னம்மா சாப்பாடு இன்னிக்கு?’’

‘‘கஞ்சி ஊத்தி வச்சுருக்கேன். நான் வயலுக்கு போறேன் குடிச்சுட்டு வீட்டை பூட்டிட்டு சாவியை உத்திரத்துலே வச்சுட்டு படலை சாத்திட்டு போங்க’’

இன்னிக்கும் கஞ்சி தானா. இதை தவிர வேறே ஒண்ணுமே உனக்கு தெரியாதா? சலித்துக்கொண்ட மகனை பார்த்து சிரித்துக்கொண்டே இட்லிக்கு ஊற போட்டுருக்கேன் நாளைக்கு இட்லி தான். இன்னிக்கு களை எடுக்க ஆள் வருதுடா. அதான் கஞ்சி குடிச்சுட்டு போ.. பட்டினியா போயிடாதே..நான் கிளம்புறேன். என சமாதானமாய் சொல்லினாள்.

பதின்பருவத்து கோளாறு, நாகரீக வேஷம் போட தெரியாத தனது பெற்றோர்களை பார்க்க அநாகரீகமாக இருந்தது வெற்றி மாறனுக்கு. அவர்களின் வீடு ஊரின் மறுகோடியில் வயல் வெளியின் தொடக்கத்தில் இருந்ததால் பிரதான சாலை மாற்றம் ஏதும் அவர்களுக்கு தெரியவில்லை. மாரிமுத்துவுக்கும் பார்வதிக்கும் தெரிந்ததெல்லாம் வயல், வெள்ளாமை, ஆடு, மாடு, பிள்ளைகள் மட்டுமே. எப்படியாவது பிள்ளைகளை படிக்க வைத்து விடவேண்டும். வெள்ளாமை உரத்துக்கும், விதைநெல்லுக்கும் களைக்கொல்லிக்கும் வரவுக்கும் செலவுக்கும் சரியாய் இருக்க உழைப்பு கொடுத்த காய்ப்பு மட்டும்தான் கையில் மிச்சம்.

நிலைமை இப்படி இருக்க பிள்ளைகளை படிக்க வைத்து விடவேண்டும் என்ற வைராக்கியம் மட்டுமே அதிகமாய் இருந்தது. அந்த எண்ணம் மட்டுமே அவர்களை நம்பிக்கையோடு அதிகமாய் உழைக்க வைத்தது.

இளையமகன் பள்ளி சீருடையோடு கிளம்பி வ, வெற்றி வேட்டி  சட்டை அணிந்துகொண்டு வர பார்வதியும் அன்புமாறனும் அவனை ஒன்றும் புரியாமல் பார்க்க, ‘‘என்னடா இது பள்ளிகொடத்துக்கு, தானே போறே’’ என்றாள் பார்வதி.
‘‘இல்ல இன்னிக்கு நான் பள்ளிகொடத்துக்கு போகலே. மெயின் ரோட்டுலே இன்னிக்கு ஜெயந்தி விழா நடக்குது. அங்க தான் போறேன். அம்பது ரூவா கொடு. மாலை  வாங்க காசு குடுக்கணும்’’ என்றான் அலட்சியமாய்.

வயலுக்கு நேரமாகிவிட்டதாலும் , வெற்றியின் அலட்சிய பேச்சாலும் பார்வதிக்கு கோபம் கொப்பளித்தது.

‘‘என்னது பணமா. எங்கேருக்கு பணம். வேட்டி சட்டையை அவுத்துட்டு பாண்ட் சட்டை போட்டுக்கிட்டு ஒழுங்கு மரியாதையா கஞ்சியை குடிச்சிட்டு பள்ளிகொடத்துக்கு கௌம்பு. அப்பாவுக்கு தெரிஞ்ச பிச்சுப்புடும். படிக்கிற வயசுலே என்ன இதெல்லாம்.’’ என்று கோபமாய் கத்திவிட்டு சும்மாடு தலையில் வைத்து கிளம்ப எத்தனித்தாள்.

‘‘நான் இன்னிக்கு பள்ளிகொடத்துக்கு போகமாட்டேன்.விழாக்கு தான் போவேன். வரேன்னு சொல்லிட்டேன். நீ காசு குடுத்துட்டு போ’’ என்று பதிலுக்கு வெற்றியும் பிடிவாதத்துடன் கோபமாய் கத்தினான்.

மேலும் கோபம் அதிகமாகி ஏதும் பேசாமல் இளையவன் அன்புமாறனை பார்த்து ‘‘இங்கவா கஞ்சியை தூக்கி தலையிலே வை. நேரமாவுது. அப்பா சத்தம் போடும். கஞ்சி குடிச்சுட்டு நேரத்தோட கௌம்பு நீ. அவன் நிக்கட்டும். அப்பா வந்து பேசிக்கும்’’ என்று பாரத்தில் தலையும், கவலையில் உள்ளமும் ஒருசேர கனக்க சோர்வாய் வயலை நோக்கி நடக்க தொடங்கினாள் பார்வதி.

அம்மா தன்னை அலட்சியம் செய்ததும் இல்லாமல், விழாவுக்கும் போகாமல் செய்துவிட்டு போனது வெற்றி மாறனுக்கு கோபத்தின் உட்சத்தை தொடவைத்தது. என்ன செய்வதென்றே தெரியாமல் இயலாமையில் உறைய வைத்தது. அப்படியே ஒன்றும் செய்ய தோன்றாமல் அருகிலுள்ள திண்ணையில் அமர்ந்தான். அன்புமாறன் அவசரவசரமாய் சாப்பிட்டு மிதிவண்டியோடு பள்ளிக்கு ஓட்டமும் நடையுமாய் கிளம்பினான். அண்ணனிடம் பேசியும் பயனில்லை.

ஏதும் பேச போனால் அடித்தாலும் அடிப்பான் அவன் இருக்கும் நிலையில் என எண்ணிக்கொண்டு கிளம்பிவிட்டான்.

ஒரே மிதிவண்டியில் தான் இருவரும் பள்ளிக்கு போய் கொண்டிருந்தார்கள்.

பத்தாம் வகுப்பு வந்தவுடன் வெற்றி மாறனின் நண்பர்கள் கூட்டம் மாறியது. பள்ளிக்கு வெளியே, படிப்பை பாதியிலே விட்டு வேட்டியை கட்டிக்கொண்டு வெட்டியாய் சுத்திக்கொண்டிருக்கும் சண்டியர்களோடு பேச ஆரம்பித்து, அவர்கள் திணித்த அரைகுறை அரசியல், சாதி, பெண்கள் பற்றிய விடயங்கள் வெற்றிமாறனை திசை திருப்பியது. போதாதற்கு பிரதான சாலையில் பள்ளிக்கு அருகிலேயே நிறுவப்பட்ட சாதித்தலைவர் சிலை வேறு.

மீசை அரும்பியதும் சொல்லிக்கொள்ள சொந்த சாதனைகள் ஏதுமில்லாமல் போனாலும் சாதி பெயரை சொல்லி மீசை முறுக்கி கொளவதில் அந்த இளைய தலைமுறைக்கு தேவைக்கு அதிகமாகவே பெருமை இருந்தது. உண்மையில் அங்கு சிலையாய் நிற்கும்

தலைவரை பற்றியோ, அவர் வரலாறு பற்றியோ அவரது கொள்கை பற்றியோ எதுவுமே இந்த அரும்பு மீசை தலைமுறைக்கு முழுதாய் தெரியுமா என்றால் இல்லை என்பதே கசப்பான உண்மை.

அவர் படத்தை தவிர அவரை பற்றிய ஏதேனும் ஒரு நல்ல புத்தகம் யாரேனும் ஒருவரிடமாவது இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை அல்லது அவரை பற்றிய உண்மை செய்திகள், ஆவணம் யாரிடமாவது இருக்கிறதா என்றாலும் விடை தெரியவில்லை.

ஒரு சாதியில் ஒரு தலைவர் உருவாகிறார், அவர் பல தலைமுறைகளை கடந்து இன்றும் சிலை வைத்து வழிபடப்படுகிறார் என்றால் என்றால் அவர் அவ்வினமக்களை முன்னேற்ற பாடுபட்டிருப்பர். கல்வி, வாழ்க்கை, பொருளாதாரம், ஒற்றுமை என பல விடயங்கள் முன்னேற்றத்தை குறிக்கும். ஒரு உண்மையான தொண்டனின் தீவிரத்தன்மை, சாதியாகட்டும், அரசியலாகட்டும், அமைப்பாகட்டும் கொள்கை பிடிப்பிலும், தனிப்பட்ட மனிதன் மற்றும் கூட்டு சமுதாய முன்னேற்றத்திலும் மட்டுமே வெளிப்படவேண்டும். கூக்குரல், கோசங்கள், மாலையிடுதல் அதோடு முடிந்து விடுவதில்லை தொண்டனின் தீவிரத்தன்மை.

அப்படி இருக்கும் பட்சத்தில் அது சுயநல அரசியல் அறுவடைக்கு துணைபோகும், சமூகத்தையும், தனி மனிதனையும் காவு வாங்கும். இதையெல்லாம் சிந்திப்பதற்கோ சொல்வதற்கோ  வேலையில்லாமல் இருக்கும் யாருக்கும் அங்கு நேரமில்லை என்பது வேடிக்கை தான். அரசியல் தலைவர்களும் அந்த கிராமத்தில் இருந்த இளைஞர்களின் இந்த சாதிப்பற்றை பயன்படுத்தி அறுவடை செய்துகொண்டிருந்தார்கள் ஒவ்வொரு தேர்தலுக்கும்.

பதின்பருவ விடலை வெற்றிக்கு இதெல்லாம் எங்கே புரியப்போகிறது.

அன்புமாறனுக்கு தனியே ஒரு மிதிவண்டி வாங்கி தர சொல்லி வெற்றிமாறனே அடம்பிடித்து அவ்வாறே நடக்க அன்றிலிருந்து இருவரும் தனித்தனியாய் பள்ளிக்கு செல்ல தொடங்கினர்.

அன்புமாறன் போய்விட தனிமையில் கோபத்திலும் விரக்தியில் அமர்ந்திருந்தார். ஜெயந்தி விழாக்கு போய் மாலை போட்டு மீசை முறுக்கி படம் பிடிக்க முடியாது. நண்பர்கள் எல்லாம் போய்  இருப்பார்கள். என்னை கிண்டல் செய்வார்கள் நாளை. மாலை வாங்க தனது பங்கு பணமும் தரமுடியாது. அம்மா மீது கோபமாய் வந்தது. அழுகையாய் வந்தது.

வெளிஉலகமே தெரியாத தனது பெற்றோர்களை எண்ணி சீற்றம் வந்தது அந்த ஒன்றுமே தெரியாத இரண்டாங்கெட்டான் பதின்பருவ பிள்ளைக்கு. கோபத்தில் பெற்றவர்களை தண்டிக்கும் வேகம் பிறந்தது வெற்றிக்கு. இப்படி ஒரு வாழ்க்கை ஏன் வாழ வேண்டும் என்றெண்ணம் வலுக்க ஒரு முடிவோடு எழுந்தான்.

காலைவெயிலும், கடும்பசியும் கஞ்சி கொண்டுவந்த பார்வதியின் மீது பாய வைத்தது மாரிமுத்துவை.

''ஏன் அப்பிடியே மத்தியானமா சோறு கொண்டு வரவேண்டியதுதானே. பசி வயத்தை கிள்ளுது  நீ இப்பதான் ஆடி அசஞ்சு வாறே'' என்று கடுகடுத்தான்.

மாரிமுத்துவின் குணமறிந்து பார்வதி ஏதும் பேசாமல் கஞ்சியை இறக்கி வைத்து எல்லாருக்கும் பரிமாற தொடங்கினாள்.

களை எடுத்த பெண்கள் எல்லாம் சாப்பிட்டு முடித்து போகும்வரை காத்திருந்து பிறகு மீதமுள்ள கஞ்சியை குடிக்க கிண்ணத்தில் ஊற்றும் போது பசித்தணிய கோபமும் தணிந்தவனாய் கோபத்திற்கு பரிகாரமாக குழைவான குரலில் ''பசங்க பள்ளிக்கூடத்துக்கு போயிட்டாங்களா'' என்றான் மாரிமுத்து.

''எங்க மெயின் ரோடுலே ஏதோ விழா நடக்குதாம். அதுக்கு தான் போவேன். பள்ளிக்கூடத்துக்கு போவமாட்டேன்னு பணம் கேட்டுகிட்டு ஒத்தக்கால்லயே நிக்கிறான். எங்கேயும் போவக்கூடாதுன்னு சொல்லிட்டு வந்துட்டேன்.. வீட்டுலே தான் நிப்பான். அவனை நெனைச்சா கவலையா இருக்கு. எங்காவது வெளிஊர்லே வேற பள்ளிக்கூடத்துல சேர்த்து ஹாஸ்டலே வச்சுட்டா ஒழுங்கா படிப்பான்.'' என்று கவலை தோய்ந்த குரலில் சொன்னாள் பார்வதி.

மரிமுத்துவையும் கவலை பற்றிக்கொண்டு. அவனும் கவனித்தான், வெற்றிமாறனுக்கு நட்புகளும் தொடர்புகளும் அண்மைக்காலங்களில் அவனை திசைதிருப்பியது புரியத்தொடங்கியது. அவனது நடவடிக்கை மற்றும் எடுத்தெறிந்து பேசும் பேச்சில் தெரிய தொடங்கியது.

''பத்தாவது முடிக்கட்டும் நல்ல மார்க் எடுத்தா நல்ல பள்ளிக்கூடம் கிடைக்கும். அடுத்த வருஷம் வெளிஊர்லே சேர்த்துடுவோம்'' என பார்வதிக்கு மட்டுமல்லாமல் தனக்கும் சேர்த்து ஆறுதல் சொல்லிக்கொண்டான்.

காலியான பாத்திரங்களை எடுத்துக்கொண்டு ''நான் போய் பாக்குறேன். வீட்டுலே இருந்த அவன்கிட்டேயே காபி கொடுத்து விடுறேன். பதினொன்னு வரை பாத்துட்டு அப்பறமா நீயே காபி வாங்க வந்துடு'' சொல்லிவிட்டு என்று கிளம்பினாள்.
வெயில் கொளுத்த ஆரம்பித்திருந்தது. வீட்டை அடைந்தவள் படல் சாத்தாமல் திறந்து கிடப்பதை பார்த்து சிறிது சினம் கொண்டவளாய் உள்நுழைந்து கிளுவையை கடித்துக்கொண்டிருந்த பக்கத்துவீட்டு ஆடுகளை விரட்டிவிட்டு படலை சாத்தி வைத்தாள். கதவு சாத்தியிருந்தது.

திண்ணையில் உள்ள உத்திரத்தில் சாவியை துழாவ சாவி அங்கு இல்லை. அப்போதுதான் கவனித்தாள் கதவு பூட்ட படவில்லை என்பதை. கதவை திறந்த பார்வதிக்கு வெயிலின் தாக்கத்தால் இருட்டாய் இருந்த நடுவீட்டில் கண்ணுக்கு ஒன்றும் புலப்படவில்லை. ஆனால் கதவை தள்ளியதும் குப்பென அருவருக்கத்தக்க நாற்றம் குடலை குமட்ட விளக்கை போட்டாள். அங்கே அவள் கண்ட காட்சி அவளை நிலைகுலைய வைத்து அவளையறியாமலே பெருங்குரலெடுத்து தெருவையே அதிரவைக்கும் படியாக அலற செய்தது. நாக்கு வெளியில் தள்ள, கண்கள் வெளியில் தள்ளி நிலைகுத்தியிருக்க மலம் தரையெல்லாம் சிதறி உத்திரத்தில் உயிரற்று தொங்கிக்கொண்டிருந்தான் வெற்றிமாறன்.

அற்ப விடயத்துக்காக விலைமதிப்பற்ற உயிரை பறித்து மரணம் அவனை வெற்றிகொண்டிருந்தது. சாதி தலைவர் ஜெயந்தி விழாவுக்கு போகாவிட்டால் உயிரை மாய்த்துக்கொள்ள இந்த பிஞ்சு தலைமுறையின் நெஞ்சில் நஞ்சு விதைத்தது யார்? உயிர் அவ்வளவு மலிவானதா? சாதி தலைவரின் சிலையின் விலை ஓர் உயிரா? அழிவை, வெறுப்பை, ஏற்றத்தாழ்வை, மரணத்தை தவிர சாதி என்ன தருகிறது இந்த சமூகத்துக்கு?

செய்தி காட்டுத்தீயாய் பரவ ஊரே ஒன்று கூடியது. எல்லாம் விரைவாக நடந்தேறியது. பள்ளியிலிருந்து விவரம் சொல்லி அழைத்து வந்த பெரியப்பாவின் மிதிவண்டி பின்புறத்தில் அமர்ந்து பயணித்த அன்புமாறனின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. மாலை மலைகளாய் குவிந்து சிலையை காணாமல் அடித்திருக்க போட்டி போட்டு கொண்டு மாலை அணிவிக்கவும் படம் பிடிக்கவும் தள்ளு முள்ளு நடந்து கொண்டிருந்தது. பெரியப்பள்ளியை ஒட்டிய தொடக்கப்பள்ளியில் மரத்துக்கடியில் நடந்த தமிழ் வகுப்பு பிள்ளைகளின் ஒருமித்த குரலில் பாரதியார் பாட்டு எதிரொலித்தது.

‘‘சாதிகள் இல்லையடி பாப்பா குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
மேலவர் கீழவரென்றே வெறும்
வேடத்தில் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியை எல்லாம் இன்று
பொசுக்கி விட்டால் எவர்க்கும் நன்மை உண்டென்பான்’’

--

## இளவரசி இளங்கோவன்,

பரவாக்கோட்டை

# தூறும் மழை மேகம்

துல்லியமாய்த்
தெ(ளி)(ரி)ந்த வானம்!
கருக்கொணடு சூழ்ந்த மேகம்!

சிறிதும் பெரிதுமாய்
ஆநிரையும் ஏழகமும்
பரிகளும் கரிகளுமாய்
கணங்களில் மாற்றங்
கொண்டு சாயலற்று
சஞ்சரிக்கும் சாம்பல் பூனைகள்!

சடசடவெனவுமில்லை
சாரலாயுமில்லை
பூவாய்த் தூவித் தூறல்!
புன்னகைத்த புதுப்
பெண்ணாய் பூமி!

தாயகம் மறவா மழைமகவு
தாய்க்குத் தரும் கொடை
அந்த வான்பொழிவு!
வரவால் மண்பொலிவு!

- மங்கையர்க்கரசி
தலைமைச் செயலகம்,
சென்னை



ஓவியம்
நிரஞ்சனா கபிலன்
375 தெற்கு தெரு,
மாங்கோட்டை நத்தம்,
வல்லூர், மன்னார்குடி



# விண்வெளியும் நீதானா

சுட்டெரிக்கும் பார்வை கொண்ட
அந்த சூரியனும் நீதானா,

வெள்ளை தேகம் கொண்ட
அந்த வெண்ணிலவும் நீதானா,

கருப்புநிற கூந்தல் கொண்ட
அந்த வான்வெளியும் நீதானா,

மின்னும் சிரிப்பை கொண்ட
அந்த விடிவெள்ளியும் நீதானா,

செந்நிற இதழ்கள் கொண்ட
அந்த செவ்வாயும் நீதானா,

கூரிய புருவ விழிகள் கொண்ட
அந்த சனிகோளும் நீதானா,

பெரும் ஈர்ப்பினை கொண்ட
அந்த வியாழனும் நீதானா,

வர்ண சேலை கட்டி கொண்ட
அந்த வானவில்லும் நீதானா.

--
இசை



# வருக வருக

அவள் முகம் நாணத்தில் நயந்து
கண்ணணங்கள் சிவக்க சிரித்தபடி,
திருமண வரவேற்பில் ஏந்திய
சந்தனகிண்ணத்தில் குங்குமம் சிந்தி
சிதைந்து கலந்த மங்கல அழகாய்
நின்றாள்.

# என்னவளே

கடன் கொடுத்த கடங்காரனாய்
காத்திருக்கிறேன், அசல் வேண்டாம்!
வட்டிக்காவது ஒரு பார்வை
பார்க்கலாமே!!

# பேராசை

நான் சுயநலம் இல்லதவன் என்றேன்!
அவள் என்னை ஒரு நொடிதான்
பார்த்தாள்.
இனி ஒவ்வொறு நொடியும் என்னை
பார்க்க வேண்டும் என எண்ணுவது!
எத்தகைய சுயநலம்.

# பேரழகு

இளவெயிலின் ஒளியை புள் இதழ்
ஏந்திய பனித்துளியை வயல் வரப்பில்
கண்டேன், ஏத்திக்கட்டிய
பாவாடையில் ஏந்திழை ஒருத்தி
கடந்துச்சென்றாள் அல்லிமுடிந்த
கூந்தல் நீர் முதுகில் சொட்ட சொட்ட!!

# விடியல்

முழு இரவையும் அவனிடம்
தொலைத்து விட்டு,
அதிகாலை ஆதவனை அதட்டுகிறாள்
எங்கே என் இரவு
விழுங்கிவிட்டாயா..?? என்று...

# மகிழ்ந்திரு

கயிறு ஒன்று தான்
உனக்கு தொடக்கமாக!
எனக்கு முடிவாக!!

# மழை முத்தம்

மழைவருமோ என அண்ணாந்து
பார்த்தபோது!நச்சென விழுந்தது ஒரு
மழைதுளி நெற்றியில்.

பேரன்புடன்,
**மனோ குணசேகரன்,**
புள்ளவராயன் குடிக்காடு.



# நெடுநாள் கழித்து
சொந்த ஊர்ப் பயணம்.
அதே பாசத்துடன்
சுற்றமும் நட்பு.
பழைய அசல் தொலைந்து
புதியதாய் இருந்தது
என் கிராமம்.

## படபடக்கும்
பட்டாம்பூச்சியைப் பிடிக்க
விழைகின்ற குழந்தைக்கு
எப்போது
முளைத்ததென்றே
தெரியவில்லை சிறகுகள்.

## காமப் பசி
தீர வேண்டுமெனில்
நிர்வாணத்தை
அணிந்தாக வேண்டும்
தேகங்கள்.

## இன்று இருப்பதும்
நாளை
இருக்கப் போவதும்
நேற்றிலிருந்து
வந்தவனுக்குத் தெரியுமா...?

## நமக்கான ஆக மொத்தம்
காதல் கனவையும் நிலவோடு
கண்டு கொண்டிருக்கிறது
இரவு வானம்.

## எல்லோரும்
என்னைத் திரும்பிப் பார்க்கும்
பேரழகனாயினும்
மீண்டும் மீண்டும்
நான் திரும்பிப் பார்க்கும்
பேரழகி நீ.

## என் விதைகளை விழுங்கிய
பறவை எங்கோ ஓரிடத்தில்
பதியமிட்டது எச்சத்தில்.

## நிலவை வர்ணித்து
கவிதை எழுத வைத்திருந்த
மொத்த கற்பனையையும்
அபகரித்துக் கொண்ட
அழகான ராட்சசி நீ.

## மலை உச்சியில் நிற்கிறேன்
என் தலை உச்சியில் நிற்கிறது
ஆகாயம்.

## குழந்தைகள்
மௌனமாய் உறங்க;
இடைவெளியின்றி பேசுகிறது
பொம்மைகள்.

## எப்போதும் போல்
புத்தனை அழைக்கும்
ஆசையைக் கைவிட்டேன்.
அப்போதும் வழக்கம் போல்
என் முன் தோன்றுகிறான்
புத்தன்.

## நம் வீட்டு மதில் மேல்
அமர்ந்த காக்கைகள்
இரு புறமும் மாறி மாறி

கரைந்தன.
மதியம் என் வீட்டிற்கு
நீ வந்தாய்.
மாலை உன் வீட்டிற்கு
நான் வந்தேன்.
கடைசிவரை நம் வீட்டிற்கு
யாரும் வரவே இல்லை
விருந்தாளிகள்.



- உணர்வும் ஆக்கமும்...
பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353.

---

அம்மாவிடம் தோற்று போ,
அன்பு அதிகரிக்கும்...

அப்பாவிடம் தோற்று போ,
அறிவு மேம்படும்...

துணையிடம் தோற்று போ,
மகிழ்ச்சி இரட்டிப்பாகும்..

பிள்ளையிடம் தோற்று போ,
பாசம் பன்மடங்காகும்...

சொந்தங்களிடம் தோற்று போ,
உறவு பலப்படும்...

நண்பனிடம் தோற்று போ,
நட்பு உறுதிபடும்...

தோற்று போ  வெற்றி கிடைக்கும்...!!!

இரவு என்ற ஓர் மருந்து
இல்லை என்றால்

பல வலிகள்
ஆறாமலே இருந்திருக்கும்....



ச.சைய்யது பாரக்
அத்திக்கடை

# துளிப்பாக்கள்

அசையும் தூரிகை
அசையாமல் செய்கிறது
ஓவியக் கண்காட்சி

கடல்பரப்பில்
இளைப்பாறுகிறது
நெய்தல் பறவை

இசைத்தபடி
பயணம் செய்கிறது
மழை

தீபாவளி கொண்டாடுகிறான்
கம்பிகளை வெட்டும் போதெல்லாம்
தொழிலாளி

மது அருந்தினான் கணவன்
மயங்கி விழுந்தால் மனைவி
குடும்பம் சுமை

கட்டி தழுவிக்கொண்டே
நெடுஞ்சாலைக்கு வழிவிடுகிறது
எதிரெதிரே மரங்கள்



பெ. விஜயலட்சுமி
காஞ்சிபுரம்
6380704001



தனலெட்சுமி

# காதல் பாடல்

பல்லவி

உன் விழியெனும் உளியால்
என்னை செதுக்கி பார்வையெனும்
மொழியால் பதுக்கிக்கொண்டாயே.....

கனவெனும் தோட்டத்தில்
உன் கால்தடம் கண்டேன்
உயிரெல்லாம் பூக்கள் பூக்க
உணவின்றி உனைநினைத்து
உயிர்கொண்டேன்.

விழியெனும்.......

சரணம்

இமைதொடும் தென்றல்
வந்து உன் அழகினைகூறுதடி
இதயத்துடிப்பும்
இருமடங்காய் ஏறுதடி.!

இளமை தோட்டத்தில்
வந்த முதல்மழைநீயடி
உயிர் கூட்டுக்குள் நின்று
குயில்போல் கூவுகிறாய் ஏனடி.!

நோயின்றி உடல்நலம் குறைகிறேன்
மொழியின்றி ஊமையாகிறேன்
உன்னால் ஏனோ ஏனோ...

உன்விழியெனும்.......

சரணம்

முன் அனுமதி இல்லாமல்
இதயத்தில் நீ நுழைந்தாய்
முகவரி இல்லாமல்
எனக்குள் நீ குடிபுகுந்தாய்.!

இடி மின்னல் இல்லாமல்
எனக்குள் ஒரு மழைக்காலம்
என் இதயத்தேரிலே
உன் வருகையால் தினம்தோறும்
திருவிழாக்கோலம்.!

நோயின்றி உடல்நலம் குறைகிறேன்
மொழியின்றி ஊமையாகிறேன்
உன்னால் ஏனோ ஏனோ...........

உன் விழியெனும்.......




--
பாடலும், படமும்...
க.அன்பழகன்,
வடுவூர் புதுகை

# மழைச் சாரலைச் சுடும் தேநீர்

மழை பெய்து ஓய்ந்த நிமிடம்..
அலுவலக சன்னல் வழியே
எட்டிப் பார்த்தேன்.

நீராடி தலைத் துவட்டாத
மரக்கிளையில்
குருவிகள் ஒன்றுக்கொன்று
தலைக்கோதி விளையாடியது!

பறவைகளுக்கு யாரும்
குடை பிடிப்பதில்லை!

ஈரம் படிந்த தரையைத் தொட
விரல்களால் முடியவில்லை..

இருந்தது ஏழாவது மாடியில்.

இருண்ட கருமேகங்கள் மறைய
சலவை செய்த வானம் வெளுக்கத்
தொடங்கியது!

மாலையில் அலுவலகம் முடிந்து
வீடு திரும்பும்போது
நினைவிலிருக்குமா?

ஈரத்தரையும்..
குருவிகளும்..
கருமேகங்களும்..

குளிருக்கு இதமாய் சுடும் தேநீர்
மட்டுமே
என் விரல்கள் பற்றிச் சாரலை ரசித்தது
சன்னல் வழி என்னுடன்!...

என் அருகில் அமர்ந்து
தேநீர் அருந்த - மழை
காதலியாகவோ
நண்பனாகவோ
இருக்க அவசியமில்லை..

மழை மழையாகவே மழைச்சாரலாகவே
இருந்தாலே போதும்!

- பொன்மணி தர்மராஜன், BE.,
பரவாக்கோட்டை.



# துளிப்பாக்கள்

நனைத்த நீர்
சிறிது பறக்க விடுகிறது
சிறகடிக்கும் பறவை

கொட்டிய தானியங்கள்
இரசிக்கிறான் சிறுவன்
பசியாறும் உயிரினங்கள்

குழந்தையோடு சோப்புக்குமிழ்களை
உடைத்து விளையாடுகிறது
காற்று

முறிந்த மரக்கிளை
இறுதியாக நன்றி கூறுகிறது
பூமிக்கு

கோபமாக பேசிய வார்த்தைகள்
தவழ விடுகிறது
மௌனிக்கும் காற்று



**சா.கா.பாரதி ராஜா,**
38-3, கைலாசநாதர் கோயில் தெரு,
பெரிய நத்தம்,
செங்கல்பட்டு. 603002.
9944315732, 8610078040

வானவில் தோன்றும் போது
வானம் அழகாகிறது

நம்பிக்கை தோன்றும் போது
வாழ்க்கை அழகாகிறது.



- கே.எஸ். ஹாஜா மைதீன்

## திருஷ்டி கழித்துப் போட்ட

தட்டில் உள்ள கற்பூரங்கள்
ஞாயிற்றுக் கிழமை தோறும்
எரிகிறது தெரு வாசலில்

ஏன் உன்னையும் சேர்த்துச்
சுற்றிக் கொள்ள மாட்டுகிறாய்
என்று கேட்ட மகனைப் பார்த்துப்
புன்னகைத்தாள் அம்மா!

அந்த புன்னகையில்
அழகான தெய்வீகம்
பூத்து மலர்ந்து உயிர்
தொட்டுப் போனது

அம்மாவின் பாசமும் பாதுகாப்பும்
குறித்த முன் ஜாக்கிரதையை விட
ஏதும் பெரிதில்லை

இந்த உலகில்
கற்பூரம் எரியும் சில நிமிடங்கள்
தெய்வங்கள் கூட
வந்து நின்றது அம்மாவோடு.

## நம்பிக்கையோடு நாட்கள்

சென்றுகொண்டிருக்கிறது
பெறுதலுக்காக
காத்திருக்கிறார்கள்

சில நேரம் பசியற்று
பெரும்பாலும் பசியோடும்
காத்திருக்கிறது கண்கள்

திசை திருப்பும்
பேச்சுகளை மறந்து
தின செய்திகளையும்
ஆதார் அட்டையும்
திரும்பத் திரும்பப் பார்த்தாயிற்று

இருக்கைகளின்
நிதானமான பொய்களை
அறியாமலும்
கறை படிந்த சொற்களை
நம்பி
இன்னும் காத்திருக்கும்
அப்பாவி மக்களை
கடந்து செல்கிறது
இந்த ஐந்தாண்டு.



- ப.தனஞ்ஜெயன்
danadjeane1979@gmail.com
9751800333

# விசுவாசம்!...

பனிபடர்ந்த இருள் சூழ்ந்த வேளையில் இருளை கிழித்துக்கொண்டு ஒலித்தது குழந்தையின் அழுகுரல் இடையிடையே நாய்களின் ஊளையிடும் சப்தமும் கூடவே காலடி சத்தமும்.

வேகமா வாங்கடா , விடியற்காலைக்குள்ள வேலையை முடிச்சிட்டு ஊர் எல்லையை தாண்டி போயிடனும்.

உனக்கென்னப்பா கருப்பா நீ சொல்லிடுவ எங்களுக்கு ஒரே பயமா இருக்குல.,

சும்மா பயப்படாதாடா எல்லாத்தையும் ஐயா பார்த்துக்கிறேன் சொல்லிடாப்புல.,

அப்புறம் என்ன வாடா செவலை!.

நாய்களின் சத்தம் அதிகமாக மாடனும், காளையனும் பின்னேவர முன்னேறி சென்றனர் கருப்பனும், செவலையும்.

ஊரின் நடுவே இருக்கும் பெரியவீட்டின் மதில் சுவரை இலகுவாக ஏறினார்கள் கருப்பனும், செவலையும் வீட்டின் முன்பக்கத்தில் காளையனும் பின்பக்க சந்தில் மாடனும் வேவு பார்க்க!.

ப்ப்பீ, கூர்காவின் விசில் சத்தத்தில் ஒரு வினாடி அசையாது மதில் சுவர் ஓரமாய் உள்ள தென்னை மரத்தின் பின்புறம் மறைந்து நின்றனர் கருப்பனும், செவலையும். விசில் சத்தத்தில் முழித்துகொண்ட பெரியவீட்டு நாய் தன்பங்குக்கு வாசலை நோக்கி குரைத்தது.

முன்வாசல் பக்கம் நின்ற மாடன் விசில் சத்தத்தில் வாசல் அருகிலையே படுத்து போர்வையை போர்த்திக்கொண்டான். சைக்கிளில் சிகரெட்டை புகைத்தவாறு கூர்கா கோவில் திண்ணையை நோக்கி நகர்ந்தான்..

நாய் போர்டிகோவில் போய் படுக்க, மெதுவாக குனிந்தவாறு பின்வாசல் பக்கம் வந்தவுடன் கருப்பன் கழிவறை குழாய் கைபற்றி தாவி ஏறினான், செவலையும் அவனை பின் தொடர மாடியின் பின் பால்கனியை அடைந்தனர்.

பால்கனி கதவின் சாவிதுவாரம் வழியே கம்பியைவிட்டு நெம்பி சத்தமே இல்லாமல் கதவை திறந்தான் செவலை, இவன் எப்படிபட்ட பூட்டையும் எளிதில் திறந்துவிடும் வேலைக்காரன். கருப்பன் பால்கனி வாசல் வழியாக உள்ளே செல்ல, செவலை

பால்கனி வாசலில் காவலிருந்தான்.
சிறிது நேரத்தில் வீட்டின் உள்ளே சத்தம் கேட்க செவலை பால்கனி பின்பக்க கழிவறையைப் வழியாக இறங்கி , வீட்டின் சுவரை ஏறி குதித்தான் மாடனுடன் அங்கிருந்து ஓட்டமெடுத்தனர். வீட்டிற்க்குள் கேட்ட சத்தத்தை வைத்து , ஏதோ தப்பு நடக்குது என்பதை உணர்ந்து முன்வாசலில் படுத்து கிடந்த காளையும் மெதுவாக நகர்ந்து ஆள் அரவம் இல்லா இடத்தை சென்றடைந்தான்.

விடியற்காலை சேவல் கூவலுடன், மக்கள் கூட்டமும் கூடியது கோவில் திண்ணையில், அங்கு ஒரு ஒரத்தில் கை, கால்கள் கட்டபட்ட நிலையில் உடலெங்கும் இரத்த காயங்களுடன் மயங்கி கிடந்தான் கருப்பன். அவனை சுற்றி இளைஞர்கள் கையில் அருவாள்,கட்டைகளுடன் முறைத்தவாறு நின்றனர்.

சிறிது நேரத்தில் கூட்டத்தில் சலசலப்பு ,ஐயா வர்றாங்க, ஐயா வர்றாங்க, அனைவருக்கும் வணக்கம் வைத்தபடி நெற்றி நிறைய திருநீர் பூசி, வெள்ளை சட்டை வேஷ்டியில் ஒரு 50 வயது மதிக்கதக்க ஆள் வரும்போதே கருப்பனை முறைத்து பார்த்தவாரே வந்தார்.
நேராக கோவில் திண்ணை நடுவே அமர்ந்தவாறு என்ன பிரச்சனை, எதுக்கு இவன இப்படி கட்டி போட்டு அடிச்சு இருக்கிங்க?!..
கருப்பன் கண்களை திறக்க சிரமபட்டு பார்த்தான், நெருக்கமான குரலாய் காதுக்குள் கேட்டவுடன்.

மங்கலாக தெரிந்தது கருப்பனுக்கு கூட்டத்தின் நடுவே பெரியவரும் அவருக்கு இரண்டு பக்கமும் செவலையும், மாடனும் கைகட்டி பாதுகாவலாக நிற்பதும்.

ஐயா, நம்ம கணக்குபிள்ளை வீட்டுல இந்தபைய களவான போயிருக்கான் பின்பக்க வழியா கதவை உடைச்சு , தடுக்கவந்த கணக்குபிள்ளைய குத்திட்டு ஓடபாத்திருக்கான் வீட்டு ஆளுங்க சேர்ந்து பிடிச்சு கட்டிவச்சிருக்கோம், கோவத்துல அடிச்சிட்டாங்கய்யா.
கணக்குபிள்ளைக்கு ஏதும் உயிருக்கு?!...

இல்லையா ஆனா ,கையிரண்டும் போச்சுய்யா இனி சேராதாம்!..
அச்சச்சோ!!...அப்படி என்னப்பா ஆச்சு?!.

அவர் தடுக்கும்போது விஷம் தடவுன சூரிக்கத்தியை வச்சு ரெண்டு கைலையும் மாறி மாறி குத்தியிருக்கான், உயிரை காப்பாத்தனும்னா கைய எடுக்கனும்னு டாக்டருங்க சொல்லிட்டாங்களாம்.

பாவத்த! , நல்ல மனுசன் அவருக்கா இப்படி நிலைமை வரனும் என்றவாறு முகத்தை மூடி வருத்தபடுவதை போல் சிரித்துகொண்டார் பெரியவர் சங்கரப்பாண்டி.
இவனை அடிச்சே கொல்லனும்னு இளைஞர்கள் கட்டையால் அடிக்க ஓங்கும்போது.,

ஏய் நிறுத்துப்பா, அவனை கொன்னுபுட்டு நீ ஜெயிலுக்கு போக போறியா?! ..

போலீஸ் ஸ்டேசனுக்கு போன் அடிச்சு நான் சொன்னேன்னு புடிச்சு கொடுங்க, இன்ஸ்பெக்டர்கிட்ட நா பேசிக்கிறேன் என்ன சொல்றது புரிதா?!..

ஆமாம்பா, ஐயா சொல்றதும் சரிதான் என்றது கூட்டம்.

ஓரக்கண்ணால் கருப்பனை பார்த்தவாரே நடையைகட்டினார் சங்கரப்பாண்டி, செவலையும், மாடனும் பின்னாலையே ஏதும் தெரியாதது போல் நடந்தனர்.

கடும்பாடுபட்டு உழைச்சு கஞ்சி குடிக்கிற நமக்கு எதுக்குயா இந்த பொழப்பு என்று அழுது வடித்து கொண்டிருந்தால் கருப்பன் பொண்டாட்டி மூக்காயி கோர்ட் வாசலில்.

ஏ புள்ள நீ ஏன் இங்க வந்த, நீ போ ஐயா இருக்காங்க அவங்க பார்த்திப்பாங்க எல்லாம், இப்படி இங்கவந்து அழுவாத.
இந்த புள்ளகுட்டிகள நினைச்சு பார்த்தியாய்யா, எனக்கு இந்த தலையெழுத்து தேவையா?!..

யோவ் இந்த புள்ளைக மேல சத்தியமா சொல்லு நீ திருடதான் போனியா?!.

நான் சொல்றேன் யார்கிட்டையும் காட்டி கொடுத்திடாத புள்ள, நம்ம சங்கரப்பாண்டி ஐயாதான் அவன் கையிரண்டையும் வெட்ட சொன்னாங்க அதுனாலதான் செஞ்சேன்.

அட பாவி மனுசா, காசுக்கு ஆசைப்பட்டு இப்படி செய்ய துணிஞ்சிட்ட, நாளைக்கு எவனும் காசு தரேன் சொன்னா என்னையும் புள்ளைகளையும் சேர்த்து கொன்னுடுவ அப்டிதானே?!..

யாரபாத்து கேட்ட காசுக்கு ஆசைபட்டேனு, இது எங்க ஐயா மேல உள்ள விசுவாசத்துல செஞ்சதுடி, யாருக்கு வேணும் காசு?!.

அவன் எங்க ஐயா சொன்னத எழுத மாட்டேனு சொல்லிட்டானாம், ஐயா ரொம்ப வருத்தப்பட்டாரு அதனாலதான் அவன் கையே இல்லாமா ஆக்கிட்டேன். பாருபுள்ள ஐயா முகத்துல சந்தோசத்த, நீ போ ஐயா பாத்துக்குவாறு!..
என்ன கருப்பா, என்ன சொல்லுது உன் பொண்டாட்டி .?
ஒன்னுமில்லை ஐயா விவரம் தெரியாபுள்ள சும்மா அழுதுகிட்டுயிருக்கு..

இந்தாம்மா மூக்காயி நான் இருக்கன்ல கூடிய சீக்கிரம் அவன வெளில கூட்டிட்டு வந்திருவேன் , அவனுக்காக பெரிய பெரிய வக்கீல் எல்லாம் வச்சுருக்கேன். நீ

புள்ளைகள கூட்டிட்டு வீட்டுக்கு போ, இந்த இந்த ரூபாயை வீட்டு செலவுக்கு வச்சுக்க..

இல்ல வேணம்ய்யா!...

இருக்கட்டும் வச்சுக்க, அப்பப்ப செலவுக்கு காசு வேணும்னா வந்து வாங்கிக்க சரியா?!...

சரிங்கய்யா!..

கருப்பா, ஜெயிலர் நம்ம ஆளுதான் சொல்லிட்டேன் அடிக்கமாட்டாப்புல, சீக்கிரம் வெளியில கொண்டுவந்திடுறேன் நீ தைரியமா இரு!..

எனக்கென்னய்யா நீங்க இருக்கிங்க, நான் எதுக்கு பயப்படபோறேன், நீதாண்டா என் மூத்தபுள்ள மாதிரி என் மானத்தை காப்பாத்திட்ட, மனசை அரிச்சுகிட்டே இருந்துச்சு நிம்மதியா தூக்கம்கூட வரல, இன்னைக்குதான் நிம்மதியா தூங்குவேன்!.

ஐயா சாமி பெரியவார்த்தை எல்லாம் சொல்லாதிங்க ,நான் எப்பவும் உங்க உப்பு திண்ணு வளர்ந்த உங்க விசுவாசிங்க ,உங்களுக்கு ஒன்னுன்னா உசுரையே கொடுப்பேன்.

நெகிழ்ச்சியுடன் சிறையை நோக்கி நடந்தான் கருப்பன்!..
எத்தனையோ விசுவாசிகள் இந்த கருப்பனை போல் சிறைக்குபின் வெள்ளந்திரியாக, எத்தனையோ சங்கரப்பாண்டிகள் வெளியில் பெரியமனிதன் போர்வையில்!.

கேள்விக்குறியாய் பல மூக்காய்களின் வாழ்க்கை, எங்கள் வானம் பார்த்த பூமியில்!...



**கி. எல்லாளன்**
வாலாந்தரவை அஞ்சல்,
இராமநாதபுரம் மாவட்டம்

# அறம் செய்து பழகு

அறநெறி விழிகள்
என்றும் திறக்க,
பாலைவனத்தில்
சுனாமி நடனம்...

இல்லறம் செய்தால்,
விதைகள் முளைக்கும்;

நல்லறம் செய்தால்,
கவிதை பிறக்கும்;

துறவறம் சென்றால்,
ஞானம் உதிக்கும்;

அறமுயற்சியில்
சாதனை மலரும்;

அறச்செயலில்
அன்பு பெருகும்;

அறப்பயிற்சிக்கு
பெரும்பரிசுகள் குவியும்;

அறப்பணிக்கு
சிங்க கரங்கள் இணையும்:

அறம் செய்து பழகு!
அதுவே உனக்கு அழகு!!



வெ.ஹேமந்த் குமார்
ஈரோடு

# ...என் வனம்....

எழுத்துகள் யாவும்
ஒன்று திரட்டி
தீரா பக்கங்களில்
ஒரு கவிதையின்
வானம் செய்கிறேன் ....
ம்ம்
வாசித்து விட்டு
சிறகடித்து செல்
பிரபஞ்சத்திற்குள்....

....துரோகம்....

துரோகம் என்பது
ஏமாற்றோ
பொய் கூற்றோ
இல்லை...
சுயநலத்தின்
மொத்த உருவம்...

....ஜிமிக்கி....

உன் ஒற்றை
ஜிமிக்கியில்
சிணுங்கள்
கூறுமடி
ஓராயிரம் திருவிழா
தேரோட்டத்தை....

....காதல் இசை....

யாரும் உச்சரிக்கபடாத
சில வார்த்தைகள் கொண்டு
அவளுக்கென
எழுதப்பட்ட
வரிகள் யாவும்
அவள்
இதழ்களில் வழியே
மந்திர சொற்களாய்
இசை பாடுகிறது....

....அவள்....

காதலோ
கண்ணீரோ
முத்தமோ யுத்தமோ
எல்லாவற்றிலும்
பெய்யென பெய்யும்
பெருமழை
அவள்....

...பயம்...

மையத்தில்
வீற்றிருக்கிறாய்
எப்போதும்
அவ்வப்போதென
ஐயங்கள் எல்லாம்
சுக்கு நூறாய்
உடைத்து...

....பிரியம்....

ப்ரியங்களின்
கூட்டிலிருந்து
பறக்க மறுக்கும்
மக்கு
குருவி
நீ ....



அன்புடன்
S.S. கார்த்திக், DCA, DME
உள்ளிக்கோட்டை.

# இயற்கையின் கடைசி கடிதம்



மன்னை ரியாஜ்

இயற்கையில் தவழ்ந்த
என் தாயகம்..

செயற்கையால் சீரழிந்த
நாடகம்..

வந்தேறியின் கைகளினால்
மலர் வளையம் சமர்ப்பணம்..

சிட்டு குருவியின்
சத்தம் எங்கே..

சிறு வண்டின்
ரீங்காரம் எங்கே..

அப்போ ஆறு மாத மழைகாலம்..
ஆறெல்லாம் வெள்ளம் வரும்...

இப்போ முன்னூறடி
துளை போட்டு தண்ணீரை தேடுகிறோம்..

மரத்தையெல்லாம் வெட்டியாச்சி ..
மரணத்திற்க்கு தயாராகியாச்சி...

மனசெல்லாம் வழிக்குதம்மா ..

மனிதாபிமானமற்ற மனிதர்களால்...

# நட்சத்திரக் குளவிகள்

## மௌனத்தின் எரிதழலால்
இரக்கமின்றி பொசிக்கி
கருகும் இதயத்தின் சாம்பலை
ஆகாய வெளியில்
திமிராய் வீசியெறிகிறாய் நீ
என் திண்ணிய நேசத்தில் உருகி
நீர்நிலைகளில் பெருகுகிறது
மேகங்களின் கண்ணீர்வெள்ளம்!

## இரவுகளில் பேராசையின் நாவினால்
தேகமெங்கும் கூசிட
வாழ்நாள் பசியுடன்
மேய்கிறாய் மதர்த்த புற்களை....
கனவுகளில் பாம்பென பிணைந்து
உயிரின் வேர்களைப் பூக்களால் உரசி
மின்னலின் கீற்றென படர்த்துகிறாய்
மழைத்தழைத்த வெற்றுவெளியை....
தனிமையில் தீவிழுங்கிய
அடர்க்காட்டின் எரிதழலைக்
குறுநகையால் நிரப்பி
சாம்பலுள் கனல்வதை
இமையால் தேன்தோய்த்துப்
பொன்செய்வாய்
எப்போதும் தித்திக்க எனைநீ!

## புலனம்வழி அனுப்பும்
வாழ்த்துகளைப் பார்க்கத்
தாமதம் செய்கிறாய்
விரும்பி அழைக்கும்
செல்லிடைப்பேசியின் அழைப்புகளைத்
தவிர்க்கத் துணிகிறாய்
காத்திருக்கும் சாலைவராமல்
மாற்றுவழியே கடந்துசெல்கிறாய்
எதேச்சையாய் சந்திக்க நேர்கையில்
மிகையான காரணத்தால்
விரைந்து விலகுகிறாய்
மாற்றம் உன்னிடமிருந்து மட்டுமா?
நம் காதலிடமிருந்துந்தானா?

உன்னிடம் பொய்யாய் கோபித்தாலும்
கணநேரமும் நிலைக்காமல்
குழந்தையின் அடத்தோடு
வெட்கங்களால் மாய்த்து
பேரன்பால் விளையாடுகிறாய்
திட்டவட்டமாய் தெரியும்
காதல் தேவனின்
எல்லையற்ற செல்லத்தால்
பிராணன் கொண்டவள்
நீயென்று?

## நிலைகொண்ட சாபத்தின்
கூரியவாள் தாக்கி
உன்னைப் பிரிந்திட்ட
ஆறாத காயங்களை
மதுக்குப்பிகளின்
பேரானந்த தழுவலால்
மெல்ல மீட்டிட
யாமத்தின் இதயத்தைச்
சுக்குநூறாய் கிழித்து
உன் வாழ்தலின் கொடுமையைக்
கண்ணீரால் இரணம்செய்தாய்
மற்றொருநாள் நீ!

## உம்மென்றும் கம்மென்றும்
மௌனம் போர்த்தி தனித்திருக்கும்
ஒற்றைச்சாளர அறைக்குள்
சிணுங்கும் வளையொலியும்
குளுங்கும் கொலுசொலியும்
உயிரைக்கிழித்து அலங்கரிக்கும்
தோரணமாய் நாற்புறமும்...
நிலவில்லா அடரிருளில்
சினங்கொண்ட நட்சத்திரக் குளவிகள்
கூட்டமாய் சூழ்ந்து மொய்த்து
நீ பிரிந்துசென்ற
சோகங்களால் விசமேற்றும்
மெல்லிய என்னிதயத்தை!

## - பொன்.தெய்வா
ஐவேலி, விழுப்புரம் மாவட்டம்

## எழுச்சி கவி

அச்சில் விதையுட்டு
எழுத்தில் உரமிட்டு
கருத்தில் விளைந்த
எழுச்சி சிற்பி நான்...

சித்தம் எழுப்பும் சத்தங்களுக்கு
காகிதத்தாளில் யுத்தம் புரியும்
அகிம்சை போராளி நான்..

கவி இயற்றிட
மையே தீர்ந்தாலும்
கை கொண்டு
தீட்டிடுவேன்.

வரிகளுக்கு வாழ்க்கை கொடுக்கும்
வலிமையவள் நான்.....

## கைதியின் வேண்டுகோள்

கைப்பேசி சிறையில் மீளும் வகுப்பறை
யுத்தம்! பேருக்கென கல்வி
பேதையவரும் பெட்டகத்தில்
வழிகாட்டி! பாதையில்லா
பயணத்திற்கோ முகவரி தேடும்
அகதிகள் நாம்! சிறகில்லா
பறவைக்கோ கைப்பேசி மூலம்
சுதந்திரம்! தொடர்பில்லா தளத்திற்கோ
தொடர்ந்தது கல்விக்கட்டணம்! விடை
தெரியா வினாக்களுக்கு விடுகதையாய்
குறுஞ்செய்தி! ஏடுகளிலின்றி
ஏற்றங்கள் வேண்டாம் காத்திருப்பின்

## எது சுதந்திரம்?

பொக்கிசமற்ற புதையலே சுதந்திரம்!
குத்தகை வாக்கியமே சுதந்திரம்!
உதிரத்தின் பிரதிபலனே சுதந்திரம்!
தீராத தாகமே சுதந்திரம்!
மூடர்களின் முழக்கமே சுதந்திரம்!
சிறகொடிந்த பறவைக்கு தானே
சுதந்திரம்!
உடைந்த பிம்பம் தானே சுதந்திரம்!
கற்பிழந்த கனவு தான் சுதந்திரம்!
ஊடல்களின் உரிமையே சுதந்திரம்!
சிதைந்த சித்திரமே சுதந்திரம்!
அடுத்தவர் விருப்பமே சுதந்திரம்!
குரலற்ற வாக்கியமே சுதந்திரம்!
வளமற்ற வாழ்க்கையே சுதந்திரம்!



- கு.மோனிஷா,
முதுகலை ஆங்கில இலக்கியம்,
இரண்டாம் ஆண்டு,
நந்தா கலை மற்றும் அறிவியல்
கல்லூரி,
ஈரோடு.

# ஜோதி நினைவு
## கபடி குழு

- வடுவூர் புதுக்கோட்டை

அடங்காத ஆர்வமுண்டு
ஆசையில்லா கர்வமுண்டு
திடமான தேகங்கொண்டு
தினவெடுத்த தோளுமுண்டு
சினம் பிடித்த காளையாக
மதம் பிடித்த யானை போல
மார்தட்டி போராட
ஊரே வந்து கூடி நிக்க
ஜோதியணியோ களமிறங்க
எதிரணியோ கலங்கினிக்க
வெற்றிபல வென்ற குழு.

பதின்மூனுக்கு பத்துயடி கோடுயிட்டு
அதை இரண்டா வகுந்துவிட்டு
எதிரணியை உள்ளவிட்டு
பலிஞ்சடுகுடு பாட விட்டு
பக் லைனை தொடவிட்டு
திரும்பிப் போக அவன் நினைக்க
மூச்சை மட்டும் விட்டுவிட்டு
கிடுக்கிப்பிடி போட்டு கிட்டு
திக்குமுக்காட வைக்கும்
தீரன்பல கண்ட குழு

களத்தில் கால் பதித்து
சடுகுடு பாடி போகத்தான் நினைத்து
வில்லிட்ட அம்பாக
புறப்பட்ட சில நொடியே
எதிரணியின் ஏழுபேரும்
மண்ணை கவ்வ மறுநொடியே
மண்ணில் போட்ட விதை போல
முட்டி மோதி வீரிட்டு - நடுக்கோட்ட
தாண்டி விட்டு ஏறிட்டு
வீராப்பாய் தொடையை தட்டி

கையும் தனை மேலுயர்த்தி
செயலால பதிலளிக்கும்
செயல்விரன் பல தந்த குழு.

தஞ்சை தரணியிலே
தான்தோன்றி தடம் பதித்து
கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து
தரைமண்ணோ, களிமண்ணோ
மரத்தூளோ, மணல்மேடோ
கட்டாந்தரையோ, ரப்பர் மேட்டோ
எதுவா இருந்தா எனக்கென்ன
நம் பாரதத்துக்கு தங்கமென
சொல்லி வைத்து தட்டி வந்த
இந்திய வீரன்கள் சில வந்த குழு.

ஜோதி கொண்டு ஓடும்
ஒலிம்பிக் போட்டி தனில்
கபடியத்தான் சேர்த்துவிட்டு
ஜோதி வீரனை ஆடவிட்டு
தங்க கப்ப வாங்கிவர
சூளுரைக்கும் இந்த குழு
அது வந்து எந்த குழு
அது நம்ம ஜோதி நினைவு கபடி குழு.



நேசமுடன்
**சுப்பையா கபிலன்**
வடுவூர்.

பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal   Thiravukolmagazine